OS: 656/2018

Date: 06.12.2023

பெயர்  :சண்முகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>-  2, 5 முதல்  7 பிரதிவாதிகள் தரப்பில்

தாவா தாக்கல் செய்யும்போது  1/3 பாகம்தான் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாவில்  ¼ பாகம்தான் கேட்டிருந்தேன். தவறுதலாக  தட்டச்சு பிழை ஏற்பட்டுவிட்டது. அதற்கு பின்பு தாவாவில் ¼ பாகம் கேட்டுள்ளேன். 2 ம் பிரதிவாதி கோவிந்தன் தாவா போடும்போது வில்லை வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் கூரை வீட்டில்தான் குடியிருந்து வந்தார். அதற்கு பின்பு வில்லை வீடு கட்டினார். தாவா சொத்தில் நான் மேற்படி வில்லை வீட்டை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றும், சொத்து விவரத்திலும் வில்லை வீட்டை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வழக்கு போடும் போது  2 ம் பிரதிவாதி வில்லை வீட்டில் குடியிருந்து வந்தாரா என்றால் குடியிருந்து வந்தார். ஆகவே தாவா சொத்தில் கட்டிடம் கட்டக் கூடாது என நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா குழந்தைக்கு 2 மகன்கள் என்றால் சரிதான் அவர்கள் பெயர்கள் சின்னபையன், முருகன் ஆவார்கள். மேற்படி சின்னபையனுக்கு பாதிபாகமும், முருகனுக்கு பாதிபாகமும் தாவா சொத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோன்று சின்னபையன், முருகனுடன் உடன்பிறந்த சகோதரிகள் 6 பேர் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி இறந்த சகோதரிகளான 6 நபர்களுக்கும் வாரிசுகள் இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள்.

நான் எனது வாக்குமூலத்தில் பெண்வாரிசுகளான சகோதரிகளுக்கு எந்த வித பாகமும் ஏற்படாது என குறிப்பிட்டுள்ளேன் அது தவறு பெண்வாரிசுகளுக்கும் சொத்தில் பாகம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சகோதரிகள் 6 பேருக்கும் சொத்துக்கள் இல்லை என கூறுவது தவறானது என்றால் சரியல்ல. அதேபோன்று வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் பெண் வாரிசுகளுக்கு சீர்வரிசைகள் சிறப்பாக செய்யப்பட்டதால் அவர்களை சேர்க்கவில்லை. எனக்கு சீர்வரிசைகள் செய்யப்பட்டது நேரடியாக தெரியாது என்று சொன்னால் எனது தந்தை சொல்லிதான் எனக்கு தெரியும். எனது தந்தை கந்தசாமிக்கு உடன்பிறந்த 3 சகோதரிகள்

இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த 3 சகோதரிகளும் காலமாகிவிட்டார்கள். அவரது வாரிசுகளும் இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். மேற்படி 3 சகோதரிகளின் வாரிசுகளுக்கும் பாகம் இல்லை என எனது முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 3 சகோதரிகளின் வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. என்னுடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் 4 சகோதரிகள் அதில் இருவர் இறந்துவிட்டார்கள். இறந்துவிட்ட சகோதரிகளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பெண்வாரிசுகளுக்கு சீர்வரிசை செய்ததாலும் அவர்களே சொத்தில் பாகம் வேண்டும் என்றதாலும் சேர்க்கவில்லை. என்னுடன் பிறந்த சகோதரிகளிடமோ அல்லது அதற்கு முன்பிருந்த பெண்வாரிசுளிடமோ விடுதலை பத்திரம் எழுதி பெறப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. சொத்துக்கள் அனைத்தும் 50 ஆண்டுகளுக்கு முன்பே வாய்மொழியாக பாகம் ஏற்பட்டு தனித்தனியாக பட்டாவும் பெறப்பட்டு அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. பட்டா அதன்படி ஏற்பட்டிருந்தாலும், அனுபவம் ஒருவரிம் உள்ளது. பட்டாவும் அனுபவமும் மாறிமாறி உள்ளது. இந்த விவரங்களை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5, 6, 7 பிரதிவாதிகள் தாவாவில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என தெரியுமா என்றால் படித்து பார்த்துள்ளேன் ஆனால் ஞபாகம் இல்லை. 5, 6 ,7 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையிலேயே தாவா சொத்திற்கு மற்ற அவசிய தரப்பினர்கள் இருக்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டும் அவர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் இந்த தாவாவில் நான் கேட்டுள்ள பாகம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு உள்ள அனைத்து தரப்பினர்களையும் கட்சி சேர்க்கப்பட்டிருந்தால் தாவா சொத்தின் பாகமே வேறுபடும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.26.50 ஏர்ஸ் ஆகும், ஆனால் நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் விஸ்தீரனமாக 1.16.50 என குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் அமைந்திருக்கிறது என்றால் 5 வில்லை வீடுகள் உள்ளது. தார்சு வீடு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி 5 வில்லை வீடுகளையும் இவ்வழக்கு தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. மேற்படி 5 வில்லை வீட்டில்

யார் யார் குடியிருக்கிறார்கள் என்றால் 1 ம் பிரதிவாதியின் வாரிசுகளும், 2 ம் பிரதிவாதியும் குடியிருக்கிறார்கள். தாவா சொத்தில் பாகம் ஏற்பட்டதால்தான் அவரவர்கள் தனித்தனியாக அவரவர் வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் குடியிருந்து வருகிறார்கள் ஆனால் பாகம் பிரித்து குடியிருக்கவில்லை. ஏற்கனவே தாவா சொத்து விவரத்தில் பாகம் பிரிக்கப்பட்டு சுவாதீனம் எடுத்துகொண்டதால் மீண்டும் அதே சொத்தை பொருத்து பாகம் பிரிக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த தாவா நிலைக்கதக்கதல்ல தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்குவிசாரணை**</u>:- 3, 4 பிரதிவாதிகள் தரப்பில்

3, 4 பிரதிவாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் அவர்களிடம் இருந்து என்ன பரிகாரம் கேட்கிறேன் என்றால் UDR பட்டா வழங்கப்பட்டதில் தவறு ஏற்பட்டுள்ளதால் அவர்களை கட்சி சேர்த்துள்ளேன். மேற்படி UDR ல் உள்ள தவறுகள் குறித்து வருவாய் துறையினரிடம் உரிய மனு அளித்துள்ளேனா என்றால் மனு அளித்துள்ளேன் ஆனால் எந்த பதிலும் இல்லை. மூல ஆவணங்கள் அனுபவத்தை காட்ட தாக்கல் செய்துள்ளேனா என்றால் இருக்கும் ஆவணங்களை கொடுத்துள்ளேன். பட்டா எண்.43, 27 ஆகிய இரண்டு எண்ணிலும் சொத்தின் அனுபவம் எனது தந்தையிடமும் அதற்கு பின்பு என்னிடமும் இருந்து வருகிறது என்று சொன்னால் பட்டாவானது எனது பெயரிலுடம் உள்ளது 1, 2 பிரதிவாதிகள் பெயரிலும் உள்ளது அனுபவத்திற்கும் பட்டா வழங்கப்பட்டதற்கு வெவ்வேறு முரண்பாடுகள் உள்ளது. பட்டா வழங்கப்பட்டதற்கும், சொத்தின் அனுபவத்திற்கும் வெவ்வேறு முரண்பாடுகள் உள்ளதால் அது குறித்து எனது வழக்குரையிலோ, எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சொல்லியுள்ள விஸ்தீனரத்தின் அளவுகளும் தவறுதலாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது பங்காளிகள் என்றால் சரிதான். அவரவர்கள் அனுபவ படி இருந்ததை பொருத்து 3, 4 பிரதிவாதிகள் தரப்பலி பட்டா முறையாக வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வழங்கப்பட்ட பட்டாவில் ஏதேனும் தவறு இருந்தால் தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டப்படி தான் வருவாய் துறையினரிடம் மேல்முறையீடுகள் செய்யவேண்டுமே தவிர நேரடியாக 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக

தாவாவில் வழக்குமூலம் எதுவும் இல்லை என்பதால் இந்த தாவா தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/- PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.